திருப்பூர் மாவட்டம் வெள்ளகோவில் வட்டாரம்

மேட்டுப்பாளையம் கிராம ஊராட்சி மணைப்பிரிவு அனுமதி உத்திரவு மேட்டுப்பாளையம
கிராம ஊராட்சி தலைவர்/செயல் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை :- திருமதி.R.விசாலாட்சி

மேட்டுப்பாளையம் ஊராட்சி

மனைப்பிரிவு அனுமதி எண்;-01/2023-24 நாள்;-04.03.2024

பொருள்;- மணைப்பிரிவு அனுமதி – திருப்பூர் மாவட்டம் – வெள்ளகோவில் ஊராட்சி ஒன்றியம் – மேட்டுப்பாளையம் கிராம ஊராட்சி – மேட்டுப்பாளையம் கிராமம் ரீ.ச.எண்;–518/1, 518/1A, 518/1B, 518/1C, 518/1E– 1.45 ஏக்கர் அல்லது 5875.00 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட இடத்தில் அமைக்கப்பட்ட மணைபிரிவிற்கான அனுமதி அளித்து உத்திரவிடுதல் தொடர்பாக,

பார்வை;– 1. அரசாணை எண், 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி–1)துறை, நாள்;–4.2.19 மற்றும் எண், 16, நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி (1) துறை நாள்;–31.1.2020

2. மேட்டுப்பாளையம் கிராம ஊராட்சி மணைப்பிரிவு சாலை பகுதிகள் (மூலை முடுக்கு உட்பட) மற்றும் பொது உபயோகம் ஆகியன ஒப்படைப்பு செய்யப்பட்ட தானபத்திர ஆவண எண்;–3819/2023 நாள்; 25.08.2023 மற்றும் TANGEDCO–(B) க்கான பொது உபயோகம் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானபத்திரம் ஆவணம் எண்; 3819/2023 நாள்; 25.08.2023
3. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்/ துணை இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்;– 5BOZNDJJ/2023/TCP நாள்;–08.09.2023
4. மனுதாரர் திரு.G.பார்த்திபன் கட்டணங்கள் செலுத்திய விபரம் பெறப்பட்ட நாள்;– 23.02.2024
5. மேட்டுப்பாளையம் கிராம ஊராட்சி தீர்மான எண்;–19/2024 நாள்; 21.02.24

உத்திரவு :-

தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் –2019 துணை விதி 47–ன் படி திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், வெள்ளகோவில் ஊராட்சி ஒன்றியம், மேட்டுப்பாளையம் கிராம ஊராட்சிக்கு உட்பட்ட மேட்டுப்பாளையம் கிராமம் ரீ.ச.எண்;– 518/1, 518/1A, 518/1B, 518/1C, 518/1E– 1.45 ஏக்கர் அல்லது 5875.00 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட இடத்தில் அமைக்கப்பட்ட மணைப்பிரிவிற்கான இடத்தில் பார்வை 2–ல் காணும் மணைப்பிரிவு சாலை பகுதிகள் (மூலை முடுக்கு உட்பட) மற்றும் பொது உபயோகத்திற்கான இடம் ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானபத்திர ஆவண எண்;– 3819/2023 நாள்; 25.08.2023மற்றும் TANGEDCO–(B)க்கான பொது உபயோகம் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானபத்திரம் ஆவண எண்;– 3819/2023 நாள்; 25.08.2023படியும், பார்வை4–ல காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்/துணை இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம், அவர்களின் செயல்முறை ஆணை எண்

ந.க.எண்;- 5BOZNDJJ/2023/TCP / நாள்; 08.09.2023-ன் படி மேற்கண்ட இடத்தில் அமையவுள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்க்கு ம.வ./ந.ஊ(திமா)எண்;- 249/2023 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டதன் படியும், மனுதார் திரு. G.பார்த்திபன் கட்டணங்கள் செலுத்திய விபரம் பெறப்பட்ட நாள்;-23.02.2024-ன் படியும், மேட்டுப்பாளையம் கிராம ஊராட்சி தீர்மான எண்;- 19/2024 நாள்;- 21.02.24-ன் படியும், கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவிற்க்கு அங்கீகாரம் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்;-

1.தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் - 2019 துணை விதி 47-ல் மனைப்பிரிவிற்காக விதிக்கப்பட்டுள்ள அனைத்து விதிகளும் இம்மனைப்பிரிவிற்க்கு பொருந்தும். எனவே பொருத்தமான விதிகள் அனைத்தும் பின்பற்றப்பட வேண்டும்.

2.நகர் ஊரமைப்பு உதவி இயக்நர் (மு,கூ.பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம் செயல்முறை ஆணை எண்;- 5BOZNDJJ/2023/TCP / நாள்; 08.09.2023-ன் படி அங்கீகரிக்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு ம.வ./ந.ஊ(திமா)எண்;- 249/2023 வரைபடத்திற்க்கு மாறாக மனையின் அளவுகள், சாலையின் அமைப்புகள்,அளவுகள் மற்றும் பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

3.ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 0.5மீ 1.2மீ அளவிலான நிரந்தர அறிவிப்பு தகவல் பலகை பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக நிறுவப்பட வேண்டும்.

4.கிராம ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட பொது இடத்தைச் சுற்றிலும், தங்களது சொந்த செலவில் கம்பி வேலி அமைத்து தகவல் பலகை அமைத்து கொடுக்க வேண்டும்.

5.மனைப்பிரிவு சாலை பகுதிகள் (மூலை முடுக்கு உட்பட)மற்றும் பொது உபயோகத்திற்க்கு ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானபத்திர ஆவண எண்;- 3819/2023 நாள்; 25.08.2023 TANGEDCO இடம் மின் பகிர்மானத்திற்க்கு ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானபத்திர ஆவண எண்;- 3819/2023 நாள்; 25.08.2023-ல் பொது உபயோக பகுதிகள் ஆகியவற்றினை மனுதாரர் சொந்த செலவில் வருவாய் உட்பிரிவு செய்து கொடுக்க வேண்டும்.

பெறுதல்;-
திரு. G.பார்த்திபன்
த.பெ. கணேசன்
எண்.107, கருமாண்டி செல்லிபாளையம்,
பவானி ரோடு, பெருந்துறை.

R.V.

தலைவர்
சிற்றூராட்சி
மேட்டுப்பாளையம்

நகல்;-
1.நகர் ஊரமைப்பு உதவி இயக்நர்/துணை இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் திருப்பூர், திருப்பூர் மாவட்டம்
2.வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), வெள்ளகோவில் வட்டாரம்.